# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.452/2015 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 13-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.வா.சா.1 | 13.06.2023 |
| பெயர் - பாலாஜி | தந்தை/கணவர் பெயர் - ராம நாயுடு |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

1. வாதி தாவா சொத்து தனது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியை எனக்கு தெரியாது. வாதி நான் வாங்கிய இடத்திற்கு பக்கத்தில் இருப்பதாக சொன்னார்கள். நான் வாங்கிய இடம் அம்பத்தூர் லெனின் நகர், 10 வது மெயின் ரோடு குறுக்கு தெரு, அமைந்துள்ளது அதன் 2520 சதுர அடி கொண்டதாகும். எனது சொத்தை நான் திருமதி பிரேமலதா என்பவரின் மகன் ஜகதீஷிடம் இருந்து வாங்கினேன். கோவிந்தராஜ நாயக்கர் மனைவி கன்னியம்மாள் என்பவர் 30.04.1986 2520 சதுர அடியை திருமதி பிரேமலாதவிற்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் விற்பனை செய்தார்.

2. கோவிந்தராஜ நாயக்கருக்கு குழந்தைகள் கிடையாது. நான் எனது எதிர் உரையில் பத்தி 8 ல் கோவிந்தராஜ் இறந்ததற்கு பிறகு அவரது மனைவியான திருமதி.கன்னியம்மாள் அவருடைய சொத்தை வாரிசுதாரர் என்ற முறையில் பங்கு பிரித்து அதில் பிளாட் B யை திருமதி பிரேமலாதாவிற்கு விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிந்தராஜ் நாயக்கரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. பங்கு பிரித்த பிளாட் A நிலத்தை திரு.வெங்கடேசன் என்பவருக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள்.

3. திருமதி கன்னியம்மாள் திரு கோவிந்தராஜன் வாரிசு தாரர் கிடையாது என்றாலும் அவர் படிக்காதவர் என்பதால் திரு.வெங்கடேசனுக்கு தான் பவர் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றாலும் திருமதி.பிரேமலதாவிற்கு எந்த ஒரு கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் ஆகவே எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் செல்லாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதி அனுபவ சான்றிதழ் மட்டும் தான் வைத்திருக்கிறார் என்பவதை தெரிந்து கொண்டு அவரிடம் இருந்து நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரிடம் இருந்து வேண்டுமென்றே கிரைய ஒப்பந்த ஆவணங்கள் தயார் செய்து அதே நாளில் அதை ரத்து செய்து பின்னர் கிரைய ஆவணம் தயார் செய்து போலியான முறையில் தாவா சொத்திற்கு உரிமை கொண்டாடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

4. பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் 2016 ல் பெறப்பட்டது ஆனால் வாதியின் அனுபவ சான்றிதழ் 2006 வழங்கப்பட்டது ஆகவே மேற்படி ஆவணங்கள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. வாதி அனுபவ சான்றிதழ் மூலமாக தாவா சொத்திற்கு உரிமை கோருவதால் அதனை முறியடிக்கும் எண்ணத்தில் தவறான ஆவணங்களை தயார் செய்து அதன் மூலம் தாவா சொத்தை அபகரிக்க முயல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.)